REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: புரட்டாசி 1உ சனி (17—9—55) ★ ★ வெளியூர்: புரட்டாசி 2உ ஞாயிறு (18—9—55) [இதழ் 82

புலிநிகர் மாந்தரைப் புண்படுத்தவா?

வானொலி மூலம் 'சவ மொழி' போதனையாம்!

அகில இந்திய வானொலியில் நடைபெறும் பள்ளி நிகழ்ச்சிகளில் 'சவ மொழி'ப் பாடம் கற்றுத்தருவதையும் சேர்த்துக் கொள்ளசர்க்கார் திட்டமிட்டிருக்கின்றனர் என்று மந்திரி கேஸ்கர் தெரிவித்திருக்கிறார். ஏற்கனவே எளிய 'சவ மொழி' அறிவு சிறிது சிறிதாக வானொலி மூலம் புகுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

காமராசர் கோரிக்கைக்கு டெல்லி கைவிரிப்பு?

'எனக்கு ஒன்றும் தெரியாது' என்கிறார் உற்பத்தி மந்திரி

நான்காவது தொழிற்சாலை சௌராட்டிரத்திலா?

★

புதுடில்லி, செப். 16—

"இந்தியாவில் நான்காவதாக அமைக்கப்படும் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையை சென்னை மாநிலத்தில் அமைக்குமாறு சென்னை முதன் மந்திரி, மத்திய சர்க்காரைக் கேட்டிருப்பதாக அவர் விடுத்துள்ள அறிவிப்பு பற்றி தனக்கு ஏதும் தெரியாது"

என்று, மத்திய சர்க்கார் உற்பத்தி மந்திரி கே. சி. ரெட்டி, கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

"நான்காவது தொழிற்சாலை துவக்குவதுபற்றி சர்க்கார் இன்னும் ஒரு முடிவு மேற்கொள்ளவில்லை;

"சௌராட்டிர மாநில சர்க்கார் மூலம், பவநகரில் ஒரு எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை அமைக்க வேண்டும் என்று தொழிலதிபர் ஒருவரிடமிருந்துமட்டுமே சர்க்காருக்கு கோரிக்கை வந்திருக்கிறது; 'கிரேப்ஸ்' என்ற பிரெஞ்சு நிறுவனத்தார் அந்தத் தொழிற்சாலைக்குத் தேவையான தொழில் நுணுக்கப் பொருளாதார உதவி செய்வதாகக் கூறியிருக்கின்றனர் என்று தெரிகிறது,"—என்றும், அந்த மந்திரி தெரிவித்திருக்கிறார்.

இத்திங்கள் முதல் கிழமை இறுதியில், டெல்லி சென்ற சென்னை முதன் மந்திரி காமராசர், இந்திய சர்க்காரிடம், சென்னை மாநிலத்தில் ஒரு எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை துவக்கவேண்டுமெனக் கோரியதாயும், அதுபற்றி இந்திய சர்க்கார் அதிகாரிகள் யோசிப்பதாயும், காமராசர் கோரிக்கைக்கு மத்திய சர்க்கார் இணங்கக்கூடும் என்றும் இந்த செப். 8-ந் தேதியன்று செய்தி வந்தது.

சென்னை திரும்பிய பின்னரும் கூட காமராசர், சென்னையில் ஒரு எண்ணெய் தொழிற்சாலை அமைவது நிச்சயம் என்று தான் நம்புவதாயும் தெரிவித்தார் என்பது, இங்கு நினைவில் கொள்ளத் தக்கது.

தொழிலாளர் ஒன்றுபட்டால் - தொழிற்கட்சி ஆட்சி ஏற்பட முடியும்

திரு. வி. வி. கிரி கருத்து

விசாகப்பட்டினம், செப். 17—

"தொழிலாளர் ஐக்கியத்துடன் ஒன்றுபட்டால் இந்தியாவில் தொழிற் கட்சி சர்க்கார் ஏற்படுவது சாத்தியமே; இப்போதைய சர்க்காருக்குப் பதிலாக, மாற்று சர்க்கார் ஏற்படுவதென்றால் அது ஒன்றுதான் சாத்தியம்,"

—என்று, வி. வி கிரி அவர்கள், கிழக்கு இரயில்வே சங்கக் கூட்டமொன்றில் பேசுகையில் கூறியுள்ளார்.

"தொழிலாளர் ஒற்றுமையுடனிருந்தால் வேலை நிறுத்தம் போன்ற நடவடிக்கைகளுக்கு அவசியமே இராது" என்றும், வி. வி கிரி கூறினார்.

"உலகம் முழுமைக்கும் தொழிலாளர் நிறுவனம் ஏற்பட்டால், ஒரு நாட்டில் வேலையில்லாமலிருப்பவர்களை மற்றொரு நாட்டுக்கு அனுப்புவது சாத்தியமாகும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

3-வது எஃகுத் தொழிற்சாலை

3,50,000 டன் 'வார்ப்பு இரும்பு' உற்பத்தி செய்யும்!

புதுடில்லி, செப். 16—

மூன்றுவது எஃகுத் தொழிற்சாலையை இந்தியாவில் நிறுவுவதற்குப் பிரிட்டிஷ் நிபுணர் குழு சமர்ப்பித்தத் திட்டத்தை இந்திய சர்க்கார் ஒப்புக்கொண்டுவிட்டதுடன், திட்டத்தை விரிவாகப் பரிசீலனை செய்வதற்கு ஒரு எஞ்சினீயரிங் கம்பெனியை நியமிப்பார்கள் என்று அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் மக்கள் சபையில் அறிவித்துள்ளார்.

இத்தொழிற்சாலையில் சிறிய, நடுத்தர தளவாடங்களும், சக்கரங்கள், டாலர்கள், இரயில்வேக்கு அவசியமான அச்சுக்கள் ஆகியவற்றையும் உற்பத்தி செய்யலாமாம்; 3 50 000 டன் எடையுள்ள 'வார்ப்பு இரும்பும்' உற்பத்தி செய்யப்படுமாம்.

முன்னாள் இந்தியா மந்திரி இயற்கை எய்தினார்

லண்டன், செப். 16—

பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் இந்தியா இருந்தபோது, இந்திய நிர்வாகத்தைக் கவனித்து வந்தவரும், அமைச்சராக இருந்தவருமான லியோ ஆமெரி, தனது 81-வது வயதில் இயற்கை எய்தினார்.

வெற்றி - தோல்வி யாருக்கு?

அரசியல்வாதிகள் அதிர்ச்சி

மேற்கு ஜெர்மன் அதிபர் டாக்டர் அடினார் சோவியத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் இறுதியில், இருநாடுகளும் முறையான அரசியல் உறவு பூணுவது என்று மேற்கொண்ட ஒப்பந்தம் கேட்டு, மாஸ்கோவில் உள்ள மேற்கத்திய நாட்டு அரசியல்வாதிகள் திடுக்கிட்டனராம்.

"இந்த முடிவு, ரஷ்யாவிற்குப் பெரும் வெற்றி' என்றும், 'மேலை நாடுகளுக்குப் பெரும் தோல்வி' என்றும் அவர்கள் தெரிவித்திருக்கின்றனராம்.

வேலை தேடுவோர் எண்ணிக்கை வளர்ந்துகொண்டே வருகிறது!

வேலை பெறுவோர் எண்ணிக்கை குறைகிறது

புதுடில்லி, செப். 16—

வேலை தேடித்தரும் நிறுவனங்களில் 1955 ஜூன் திங்களில் சுமார் 1,45,424 பேர்கள் வேலை கோரி பெயர்களைப் பதிவு செய்திருந்தார்கள்; ஆனால் ஜூலைத் திங்களில் இந்த எண்ணிக்கை 1,57,446 ஆக உயர்ந்தது; ஒரு மாத காலத்தில் 12,000 பேர் அதிகமாக வேலை கோரியிருக்கின்றனர்.

மேலும், ஜூன் திங்களில், 'வேலைக்கு தேவை' என்று கேட்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 23,795-ஆக இருந்தது; ஆனால், ஜூலையில் அந்த எண்ணிக்கை 20,186 என்று குறைந்துவிட்டது.

ஜூலைத் திங்களில், மொத்தம் வேலை கேட்டிருந்தது வேலை பெருதவர் எண்ணிக்கை 6,60,000-ஆக உயர்ந்திருக்கிறது.

இந்தத் தகவல்களை சர்க்கார் குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது.

பி. சி. ஜி. பற்றிப் பிரசாரம்

சென்னைக்கு அதிகாரி நியமனம்

பி. சி ஜி. ஊசி மருந்து பற்றி சென்னையில் பிரசாரம் செய்ய டாக்டர் எம். வெங்கடேசன் என்பவரை சர்க்கார் நியமித்துள்ளனர்.

கண்ணீர் துளிகளுடன் கணவனுக்கு நினைவுக் கல் நாட்டிய இள நங்கை!

சுதந்திர தினத்தன்று நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிர் நீத்த மாணவருக்கு நினைவுச்சின்னம்

பீகாரில் நடைபெற்ற பரிதாப விழா

நவாதா (பீகார்), செப். 17—

சுதந்திர தினத்தன்று நடைபெற்ற போலீஸ் துப்பாக்கிப் பிரயோகத்தில், இவ்வூர் பன்ஹாய் பள்ளி மாணவரான மகேந்திர குமார் சிங் பலியானார்.

அம்மாணவரின் பச்சிளம் மனைவிக்கு 15 வயதுதான் ஆகிறது; இளம் விதவையான சாவித்திரா தேவி, கண்ணீர்த் துளிகளுடன், தன்னுடைய கணவனின் நினைவுச் சாகக் கட்டப்படும் பள்ளிக் கட்டிடத்திற்குக் கல்நாட்டு விழா ஆற்றினார்.

கணவன் படித்த பள்ளிக்குள்ளேயே கட்டப்படும் இந்த நினைவுக் கூடம் பள்ளி மாணவர்களாலேயே எழுப்பப்படுகிறது.

திருச்சி உழவர் போராட்டம்

குழந்தைகளுடன் பெண்கள் மறியல்

நிலை நெருக்கடிக் கட்டத்தை அடைகிறது

திருச்சி, செப். 16—

திருச்சி மாவட்டம் லாலாபேட்டை வட்டத்தில் மீண்டும் விவசாயிகள்—மிராசுதார்கள் தகராறு உருவாகி, நிலை, நெருக்கடிக் கட்டத்தை அடைந்திருக்கிறது.

கடந்த ஆகஸ்டு 20-ந் தேதி, திருச்சி மாவட்ட நிர்வாக அதிகாரியின் உதவியாளர் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தப்படி, ஒரு மிராசுதார், கூலிக்கு வேறு ஆட்களைச் சேகரித்து, தனது பண்ணை நிலத்தை உழுவதற்கு முற்பட்டிருக்கிறார்.

சுமார் 200 பெண்கள், குழந்தைகளையும் தூக்கிக்கொண்டு நிலத்தில் இறங்கி, கூலிக்குப் பிடிக்கப்பட்ட வேறு ஆட்களைக் கொண்டு நிலத்தை உழுவதை எதிர்த்து நிற்கின்றனர்; கலப்பையின் முன்னால் தங்கள் குழந்தைகளைக் கிடத்தி உழ முடியாதவாறு செய்திருக்கின்றனர். சில பெண்கள், தங்கள் கோபத்தையும், வெறுப்பையும் காட்ட பழைய சட்டி பானைகளையும், துடைப்பக் கட்டைகளையும் கொண்டு வந்திருக்கின்றனர். அந்தக் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் எட்டநின்று இந்த 'சத்தியாக்கிரக'த்தை வேடிக்கை பார்த்திருக்கின்றனர்.

இரு சாராரும் மோதிக் கொள்ளாமலிருக்கப் போலீசார் தலையிட்டு இரு சாராரையும் சமாதானப்படுத்தி இருக்கின்றனர்.

மகாதானபுரம்போன்ற கிராமங்களிலும், மிராசுதார்களின் போக்கிற்கு எதிராக இத்தகு கண்டன கிளர்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன.

பல மிராசுதார்களும், மாவட்ட நிர்வாக போலீஸ் அதிகாரிகளிடம் இதுபற்றி முறையிட்டிருக்கின்றனர்.

போலீசார், நெருக்கடி நிலைமைகள் எப்படியானாலும் சமாளிப்பதற்கு தங்களைத் தயாராக்கிக்கொண்டிருக்கின்றனராம்.

தி. மு. கழகத் தோழர்கள் கைது

திராவிடப் பிரிவினை வார எதிரொலி

சென்னை, செப். 17—

சென்னை 43-வது வட்ட தி. மு. கழகத் தோழர்கள் வி. கன்னியப்பன், பி. கே. சிவக்குமார் ஆகிய இருவரும் 'திராவிட நாடு பிரிவினை வாரம்' விளக்கச் சுவரொட்டிகளை வட்டத்தின் முக்கிய இடங்களிலெல்லாம் நேற்றிரவு ஒட்டிக் கொண்டு வருகையில் கள்ளிரவில் 'டி 3' போலீஸ் சப் - இன்ஸ்பெக்டரால் பி. பி. சாலையில் கைது செய்யப்பட்டு போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

சுமார் இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு அவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

"மீண்டும் நீங்கள் இம்மாதிரி ஒட்டினால் கைது செய்வோம்" என்று சப்-இன்ஸ்பெக்டர் மிரட்டினாராம்.

5 பேர்கள் கைது செய்யப்பட்டு வழக்குத் தொடரப்பட்டிருக்கின்றனர்.

இப்போது குளித்தலை வட்டமெங்கும், பொதுவாக, இந்த விவசாயிகள் 'போராட்டம்' வலுத்து வருகிறது என்று கூறப்படுகிறது.

பர்மாவில் ஒரு 'பாஸ்டிலி'

சிறையைத் தாக்கி தலைவர்களை விடுவித்த புரட்சிக்காரர்கள்

இரங்கூன், செப். 16—

பர்மாவில் ஒரு 'பாஸ்டிலி' நடைபெற்றிருக்கிறது.

இரங்கூனிலிருந்து சுமார் 320 மைல் வடமேற்கில் உள்ள நியாங்கு சிறைச்சாலையை, சுமார் 150 பர்மியப் புரட்சிக்காரர்கள் தாக்கி, அங்கு காவல் வைக்கப்பட்டிருந்த தங்கள் தலைவர்கள் இருவர் உட்பட 131 கைதிகளை விடுவித்திருக்கின்றனர்.

(4-ம் பக்கம் பார்க்க.)

நம் நாடு
தி. மு. க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 17—9—'55 சனி

மாஸ்கோ ஒப்பந்தம்!

கொடூரமான சேதங்களை விளைவிக்கும் கோரமான யுத்தங்கள் இனிமேலும் உலகத்தில் தலைகாட்டுவதை, எந்த ஒரு அரசு முறையின்கீழ் வாழும் மக்களும் இன்று விரும்பவில்லை என்பது தெளிவு. கடந்த கால யுத்தங்களின் போது பெற்ற கசப்பான அனுபவங்களின் சாயல், இன்னும் உலக மக்களைச் சுற்றிப் படர்ந்துதானிருக்கிறது. இரண்டாம் உலகப் பெரும் போர், உலக மக்களுக்கு, 'யுத்தம்' என்ற சொல்லின் மீதே ஒரு வெறுப்பை மூட்டிவிட்டிருக்கிறது; ஆனாலும், இரண்டாம் உலகப் பெரும் போருக்குப் பின், மீண்டும் ஒரு யுத்தம் தோன்றிவிடுமோ என்று அச்சுறுத்திய 'சம்பவங்கள்' உலகத்தில் நிகழாமலிருக்கவில்லை — இன்னும் அப்படி அச்சுறுத்தும் வல்லமை பெற்ற சம்பவங்கள் நிகழ்வதற்கு கேந்திரங்கள் இல்லாமலுமில்லை — 'சமீப காலத்தில், உலக நெருக்கடி ஓரளவு தணிந்திருக்கிறது,' என்று, பலரும் ஒப்புக் கொள்ளக்கூடிய சூழ்நிலைகள் உருவாகியிருந்த போதிலும்!

மேலும் ஒரு உலக யுத்தம் மூளுமானால், இலட்சக்கணக்கான ஆண்டுகளாகப் பல்வேறு வளர்ச்சிக் கட்டங்களைத் தாண்டி இன்றுள்ள முன்னேற்ற நிலைக்கு வந்துள்ள மனித வர்க்கமும், அதன் பல்வேறு பிரிவினரும் தாங்கள் பெற்றுள்ள வாழ்க்கை நிலைக்கும், தாங்கள் வாழும் நிலப்பரப்பின் பூகோள, தட்பவெட்ப நிலைகளுக்கும், தங்களின் அறிவு முதிர்ச்சிக்கும் ஒப்ப தோற்றுவித்துப் பாதுகாப்புடன் வளர்த்து வரும் பண்பாடும் பூண்டோடு அழிந்துபடும் — என்று உலக மக்கள் அஞ்சுகின்றனர்.

அவர்களுக்கு இயற்கையாகவே ஏற்படும் அந்த அச்சத்தைத் தவிர்க்க எவராலும் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு சிறிய முயற்சியும் பாராட்டப்படுவது நியாயமான ஒன்றாகும்.

மீண்டும் ஒரு உலகப் பெரும் போருக்கு இழுத்துச் செல்லும் ஆற்றல்படைத்த - ஆனால், நீறுபூத்த நெருப்பாக—வெடிக்காத எரிமலையாக—பொங்காத அலைகடலாக விளங்குகின்ற நெருக்கடிக் கேந்திரங்களுள், ஜெர்மனியும் ஒன்று.

இரண்டாம் உலகப் பெரும்போரின் இறுதியில், ஜெர்மனி 'மேற்கு - கிழக்கு' என, இரண்டு துண்டாயிற்று; மேற்கு ஜெர்மனி—பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய வல்லரசுகளின் பிடியிலும், கிழக்கு ஜெர்மனி—ரஷ்யாவின் பிடியிலும், பிரிந்து இருந்தன.

அதற்குப் பிறகு கடந்த 10 ஆண்டு காலத்தில் எண்ணற்ற நிகழ்ச்சிகள், ஜெர்மன் சிக்கலை ஒட்டி எழுந்தன.

மேற்கு ஜெர்மனியில் தங்களுக்கிருக்கும் பிடியை அழுத்திக்கொண்டு அதை மீண்டும் ஆயுதபாணி ஆவதற்கான வழியை, மூன்று மேற்கத்திய வல்லரசுகளும் மேற்கொண்டன—இந்த ஆண்டில் இது பற்றி எல்லாம் நாம் அவ்வப்போது எழுதியிருக்கிறோம்.

'ஜெர்மனி துண்டுபட்டுக் கிடப்பது, ஒரே இன வழி மக்களான ஜெர்மானியர்களின் நலனுக்கு உகந்தது அல்ல; எனவே, மீண்டும் ஜெர்மனி ஒன்றுக்கப்பட வேண்டும்,' என்ற கோரிக்கை, ஜெர்மனி துண்டாடப்பட்ட நாளிலிருந்து எழுப்பப்பட்டு வருகிறது.

இந்தச் சிக்கலுக்கு முடிவு காணவேண்டியவர்கள், இரு துண்டுகளிலும் வாழும் மக்கள் தானேயன்றி, வேறு வெளி வல்லரசுகள் எவையுமல்ல என்பதும், பரவலாக சுட்டிக்காட்டப்பட்டு வருகிறது.

பொதுவாகவே, உலக நெருக்கடியைத் தணித்து, நிரந்தரமானதோர் சமாதானம் உலகத்தில் நிலவச் செய்வதற்காக வென்று கூறி, உலக வல்லரசுகளால், சமீப காலத்தில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

அவற்றுள் ஒன்றாக, சோவியத் ரஷ்யா, மேற்கு ஜெர்மன் அதிபர் டாக்டர் அடினரை மாஸ்கோவிற்கு வருகை தருமாறு வேண்டிற்று; டாக்டர் அடினர் தலைமையில் மேற்கு ஜெர்மன் அரசியல்வாதிகளும், மார்ஷல் புல்கானின் தலைமையில் ரஷ்ய அரசியல் வாதிகளும் மாஸ்கோவில் கடந்த கிழமை இறுதியில் கூடிப் பேசினர்.

ரஷ்யத் தலைவர்கள் முதன் முதலில், 'மேற்கு ஜெர்மனியும்—ரஷ்யாவும், ராஜ்ய உறவு கொள்ள வேண்டும்,' என்று கோரினர்; ஆனால், மேற்கு ஜெர்மன் தலைவர்கள், முதலில், 'ரஷ்யாவில் சிறை வைக்கப்பட்டுள்ள ஜெர்மன் யுத்தக் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும்' என்றும், 'இரு ஜெர்மன் துண்டுகளும் ஒன்றாக வேண்டும்' என்றும் கோரினர்; ஆனால், 'ரஷ்யாவில் சிறைவைக்கப்பட்டுள்ள ஜெர்மானியர்கள் யுத்தக் கைதிகள் அல்லர்; யுத்தக் குற்றவாளிகள்; மேலும், அவர்களை விடுதலை செய்யும் கோரிக்கை, இரு நாடுகளுக்குமிடையில் அரசியல் உறவு ஏற்பட்டாலன்றி கவனிப்பதற்கில்லை,'—என்று ரஷ்யர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டனர்.

'இரு நாடுகளும் அரசாங்கத் தூதுக் குழுக்களைப் பரிமாறிக் கொள்ளலாம்; ஒழுங்கான அரசியல் உறவு தேவையில்லை,' என்று, டாக்டர் அடினர் வாதாடியது வீணாகிவிட்டது.

பின்னர், டாக்டர் அடினர், 'ரஷ்யாவில் உள்ள ஜெர்மானியர்களை விடுவிக்க வழி [illegible] நாடு திரும்புவ[illegible]யைக் [illegible],' என்று கருதியோ என்னவோ, இரு நாடுகளுக்குமிடையே அரசியல் உறவு ஏற்படுத்திக் கொள்ளச் சம்மதித்திருக்கிறார்.

மேலும், 'இரு ஜெர்மனிகளையும் ஒன்று சேர்க்கும் பிரச்சினை பற்றி நான்கு வல்லரசுகளும் மீண்டும் சந்திக்கும்போது கவனித்துக் கொள்ளலாம்,' என்று முடிவாகியிருக்கிறது — அந்தப் பேச்சுவார்த்தைகளில்!

அரசியல் உறவு ஏற்படுத்திக் கொள்ள அடினர் சம்மதித்து விட்டதால், ரஷ்யச் சிறைகளில் வாடும் ஜெர்மானியருக்கு விடுதலை கிடைக்கிறது.

இந்தப் பேச்சு வார்த்தைகளின் முடிவின்போது, மேற்கண்ட அம்சங்களுடன் கையெழுத்தான ஒப்பந்தம் குறித்து புல்கானின் தெரிவித்துள்ளதைப் போல, நிலவும் சிக்கல்களுக்குப் பரிகாரம் தேடுவதற்கு ஒருவரை ஒருவர் பரஸ்பரம் புரிந்துகொள்ளும் நிலை வளர இந்த ஒப்பந்தம் பயன்படுகிறது என்பதாலும், இந்த ஒப்பந்தத்தின் பயனாக யுத்த காலத்தில் சிறைப் பிடிக்கப்பட்டவர்கள், யுத்தம் ஓய்ந்து பத்து ஆண்டுகளுக்கு மேலாகியும் சிறையில் வாடும் சோக நிலை மாறுகிறது என்பதாலும், மாஸ்கோ ஒப்பந்தம் பலரின் பாராட்டுதலையும் பெறுவதில் ஆச்சரியமேதுமில்லை!

சென்னை மாநில நீர்ப்பாசன வசதியின்மை!

போக்குவதற்கு மந்திரி கூறும் வழி

திருநெல்வேலி, செப். 15—

"நீர்ப்பாசன வசதியைப் பெறுவதில் சென்னை மாநிலத்திற்கு உள்ள கஷ்டத்தைத் தீர்க்க, அண்டையில் உள்ள மாநிலங்களின் உபரி ஆற்று நீரைத் திருப்பிப் பயன்படுத்திக் கொள்வதைத் தவிர வேறு வழி இல்லை"

என்று, நிதி மந்திரி சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறார்.

"தமிழ் நாட்டில், காவேரியைத் தவிர வேறு பெரிய நதிகள் இல்லை; காவேரி நதியின் 95 சதவிகித நீர், பாசனத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது;

"நீர்ப்பாசனத்திற்கென ஏதேனும் புதிய திட்டங்கள் இருப்பின் அவற்றை மேற்கொள்ள சென்னை சர்க்கார் தயங்காது;

"இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் எல்லாம் ஏற்கனவே மாநிலத்தில் உள்ள நீரைப் பகிர்ந்து கொள்வதற்காகத்தான் அமைந்தன;

"திரு-கொச்சியில் உள்ள ஆறுகள் சிலவற்றின் நீர் வீணாகக் கடலில் விழுவதைத் தடுத்து சென்னை மாநிலத்திற்குத் திருப்பினால் திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும்; இது பற்றி சர்க்கார் விசாரணை நடத்தி வருகின்றனர்; 'மூன்று-நான்கு திட்டங்கள் நிறைவேற்றக்கூடியன,' என்று சர்க்காருக்குத் தெரியவந்துள்ளது; ஆனால், அவை இரு மாநிலங்களிடையேயும் பேச்சுவார்த்தை நடத்திய பின் மேற்கொள்ளப்பட வேண்டியவையாயுள்ளன;

"இதற்காக, மத்திய சர்க்கார், சட்டமொன்று செய்வது பற்றியும் முயற்சித்துக் கொண்டிருக்கிறது;

"ஆந்திர மாநிலத்தில் உள்ள கிருஷ்ணா, கோதாவரி நதிகளின் உபரி நீரை சென்னை மாநிலத்திற்கு ஏன் திருப்பிக்கொள்ளக்கூடாது? இந்த நதிகளின் நீரில் 15 சதவிகித அளவுமட்டுமே நீர்ப்பாசனத்திற்காகப் பயன்படுகிறது; எஞ்சியவை, வீணாக கடலில் போய் விழுகின்றன; இந்தப் பிரச்சினை குறித்து சீக்கிரமே ஒரு முடிவு காண முடியும்,"

என்றும் மந்திரி சுப்பிரமணியம் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆட்லி விருப்பம்!

அரசியல் வாழ்விலிருந்து ஓய்வு பெறுவார்?

பிரிட்டிஷ் தொழிற்கட்சித் தலைவரான கிளெமண்ட் ஆட்லி, அரசியல் வாழ்விலிருந்து ஓய்வு பெற விரும்புவதாகத் தெரிவித்திருக்கிறாராம்.

"நான் நீண்ட காலமாக அரசியலில் ஈடுபட்டுவிட்டேன்; இனிப் பொறுப்பை, ஒரு இளைஞரிடம் ஒப்படைக்க விரும்புகிறேன்"

என்று அவர் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

சபையில் கேட்டவை!

"மோரார்சந்த் கன்னு, அகதிகளுக்கான மந்திரியல்ல; அவர் ஒரு அகதி மந்திரி."

—பண்டிட் தக்கூர் தாஸ் பர்காவா

"எனக்கு வழிவிட்டால், அகதிகளுக்கு; தங்கத்தாலான வீடுகள் கட்டித்தருவேன்."

—ஜே. கே. பான்ஸ்லே

"அகதிகளிடையே அகதி புனரமைப்பு மந்திரி கொண்டுள்ள பிரிவுகளைப்போல, மனு கூட இந்துக்களிடையே சாதிப் பிரிவுகளை ஏற்படுத்தியிருக்கவில்லை."

—பேராசிரியர் டி. சி. ஷர்மா

2,50,000 'இராம தூதுவர்'கள்

அதிகபட்சமாக ஏற்றுமதி செய்யப்படுவர்!

புதுடில்லி, செப். 15—

ராஜ்யங்கள் சபையில், குரங்குகள் ஏற்றுமதியைப் பற்றிக் கேள்விகள் எழுந்தன.

"1956 ஜூன் மாதம் வரையில் அதிகபட்சமாக 2,50,000 குரங்குகள் ஏற்றுமதி செய்யலாம் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது; பயிர்களுக்கு மிகுந்த சேதத்தைக் குரங்குகள் உண்டு பண்ணி வருவதால் அவைகளைக் கொல்பவர்களுக்கு வங்க சர்க்கார் பரிசுகள் வழங்கிவருகிறது," என்று, வர்த்தக மந்திரி பதிலளித்தார்.

கணிசமாக முன்னேறியுள்ளதாம்!

புதுடில்லி, செப். 15—

எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாய இலவச ஆரம்பக் கல்வி அளிப்பதில், இந்தியா கணிசமாக முன்னேறியுள்ளதாம்!

மக்கள் சபையில் இதை அறிவித்த கல்வி மந்திரியின் பார்லிமெண்டரி காரியதரிசி, 1955—56-ல் இதற்காகச் செலவிடப்படும் தொகை சென்ற ஆண்டுச்செலவை விட ரூ. 31½ கோடிக்கும் அதிகமாகும் என்றும், மாநிலங்கள் செலவிடும் தொகைகளும் இதில் சேர்ந்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

கைத்தறித் தொழில் அபிவிருத்திக்கு மத்திய ஆட்சியினர் நிதி உதவி

மாநில வாரியாகப் புள்ளி விவரம்

கைத்தறித் தொழிலின் அபிவிருத்திக்காக எட்டு மாநிலங்களுக்கு உதவித் தொகையாகவும், கடனாகவும் இந்திய சர்க்கார் மேற்கொண்டு ரூ. 28,55,000 வழங்கியுள்ளனர்.

விற்பனை நிலையங்களை ஏற்படுத்துவதற்காகச் சென்னைக்கு உதவித் தொகையாக ரூ. 38,970; திரு-கொச்சிக்குக் கடனாக ரூ 39,800 வழங்கப்பட்டிருக்கிறது.

கைத்தறிப் பட்டுத் தொழிலின் அபிவிருத்திக்காக ஆந்திராவுக்குக் கடனாக ரூ 2,30 000; மைசூருக்குக் கடனாக ரூ 1,35 875—உதவித் தொகையாக ரூ. 39,600 வழங்கப்பட்டிருக்கிறது.

துங்கபத்திரை அணைத் திட்டம் காரணமாக இடம் பெயர்ந்துள்ள நெசவாளர்களுக்கு 50 வீடுகளைக் கட்டித் தருவதற்காக, தாம்ப்ரஹள்ளியில் உள்ள நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி - விற்பனைச் சங்கத்துக்குக் கடனாக மொத்தம் ரூ. 60,000 வழங்கப்பட்டிருக்கிறது.

துணிகளுக்கு மழமழப்பேற்றி, இறுதியாக உருவாக்கும் இயந்திர சாதனமொன்றை நிர்மாணிப்பதற்காகவும், சாதனத்துக்காகக் கட்டடமொன்றைக் கட்டுவதற்காகவும் ஆந்திராவுக்குக் கடனாகரூ 3,10,450 ம்—சகாயத் தொகையாக ரூ. 1,43,250ம் வழங்கப்பட்டிருக்கிறது.

மற்றும் மத்தியப் பிரதேசத்துக்குக் கடனாக ரூ. 7,95,000—சகாயத் தொகையாக முறையே ரூ. 25,000; ரூ. 7,500-மும், பம்பாய்க்குக் கடனாக ரூ. 6,50,000-ம்—சகாயத் தொகையாக சுமார் ரூ. 1,76,000-மும், மணிப்பூருக்குக் கடனாக ரூ. 1,05,250—சகாயத் தொகையாக ரூ. 28,800-ம், ஒரிசாவுக்குச் சகாயத் தொகையாக ரூ. 70,000-மும் வழங்கப்பட்டிருக்கிறது.

நிலங்களை தேசிய மயமாக்கும் வேலை

பர்மாவில் தீவிரமாகிறது

இரங்கூன், செப். 14—

பர்மா சர்க்கார், தொடர்ந்து நிலங்களை தேசியமயமாக்கும் வேலையில் ஈடுபட்டுவருகிறது.

கடந்த 1955 மே திங்கள் முடிவு வரை 6,05,435 ஏகர் நிலம் தேசியமயமாக்கப்பட்டு, 59,627 விவசாயிகளுக்குப் பங்கிட்டுத் தரப்பட்டிருக்கிறது.

28 மாவட்டங்களில் உள்ள 33 நகர்ப்புறங்களிலும், 678 கிராமங்களிலுமுள்ள நிலங்கள் விவசாயிகளுக்குப் பங்கிட்டுத் தந்திருக்கிறது.

வரும் 1955—56-ம் ஆண்டிற்குள்ளாக எல்லாமாவட்டங்களிலும் இந்த நிலங்களை தேசிய மயமாக்கும் வேலையை முடித்துவிட சர்க்கார் எண்ணியிருப்பதாகத் தெரிகிறது.

நிலச் சீர்திருத்த மசோதாவுக்கு எதிர்ப்பு?

பம்பாய் சட்டசபையில் நிலச் சீர்திருத்த மசோதா விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கர்னாடகப் பிரதேச உறுப்பினர்கள் சபைக்கு வரவில்லை,

'மாநில புனரமைப்புக் குழுவின் அறிக்கை வெளியாகும்வரை, கர்னாடகப் பிரதேசத்தை இந்த மசோதா பாதிக்கக்கூடாது' என்று அவர்கள் கூறுகின்றனர்.

கிராமத் தொழில்கள் அபிவிருத்திக்கு நிதிஉதவி

இந்திய சர்க்கார் பனை வெல்லத் தயாரிப்புத் தொழிலின் அபிவிருத்திக்காக அகில இந்திய காதி - கிராமத் தொழில்கள் போர்டுக்கு உதவித் தொகையாக ரூ 8,93,500—கடனாக ரூ. 5,11,200 வழங்கியிருக்கிறது.

உதவித் தொகையில், ரூ. 2 இலட்சம் மாநிலங்களின் பனை வெல்லத் தயாரிப்புத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக சட்டபூர்வமாக ஏற்பட்டுள்ள மாநில போர்டுகளுக்கு அளிக்கப்படும்.

சேலம் மாவட்டத்தில் பொதுச்செயலாளர்

மாநில மாநாட்டிற்கு ரூ. 1,000 நிதியளிப்பு

சேலம் மாவட்ட சுற்றுப் பிரயாணத்திற்காக, பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 11-9-55 காலை 6-20 மணிக்கு, சேலம் சந்திப்பு வந்து சேர்ந்தார்.

சேலம் மாவட்டச் செயலாளர் தோழர் ஜி. பி. சோமசுந்தரம், துணைச் செயலாளர் தோழர் ப. இராமலிங்கம், பொருளாளர் தோழர் பி. எம். குப்புசாமி, பொதுக் குழு உறுப்பினர்கள் தோழர்கள் ப. கண்ணன், எம். பி. சுப்பிரமணியம், மற்றும் சேலம் நாட்டாண்மைக் கழக உறுப்பினர் தோழர் ஏ. ஆனைமுத்து, தோழர் இரா. சகந்நாதன் ஆகியோர் பொதுச்செயலாளரை வரவேற்றனர்.

இராசிபுரம்

சேலம் கூட்டுறவு மத்திய பாங்கு ஓய்வு விடுதியில் தங்கி, சிற்றுண்டியை முடித்துக்கொண்டு தோழர்களோடு இராசிபுரம் புறப்பட்டார்.

இராசிபுரம் தி. மு. கழகத்தினர் இரங்க விலாஸ் தியேட்டரில் சிறப்புச் சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

காலை 10 மணிக்கு, தோழர் ஜி. பி. சோமசுந்தரம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. பொதுச் செயலாளருக்கும், தோழர் எம் ஜி இராமச்சந்திரன் அவர்களுக்கும் இராசிபுரம் தி. மு. கழகத்தினரால் வரவேற்பு இதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன.

'கலையும் வாழ்வும்' என்பது குறித்துத் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அரியதோர் சொற்பொழி வாற்றினர்.

தியேட்டரில் பெருந்திரளான மக்கள் திரண்டிருந்தனர்.

நகராண்மைக் கழக வரவேற்பு

மாலை 5 மணிக்கு, இராசிபுரம் நகராண்மைக் கழகச் சார்பில் பொதுச்செயலாளருக்கு வரவேற்பளிக்கப்பட்டது. தலைவர் தோழர் ஜி. கிருஷ்ணன் வரவேற்பிதழ் வாசித்தார்.

வரவேற்புக்கு பதிலளிக்கும் முறையில் பொதுச்செயலாளர் அவர்கள், நகராண்மைக் கழகம், ஊராண்மைக் கழகம் ஆகியவைகளின் பொதுக்கடமை, கண்ணியம், பயன்கள் குறித்துப் பேசினர்.

பின்னர் சிற்றுண்டி விருந்து நடைபெற்றது. விருந்தில் நகராண்மைக் கழகத் தலைவர், உறுப்பினர்கள், நகரப் பிரமுகர்கள், கழகத் தோழர்கள் கலந்துகொண்டனர்.

மாலை 7 மணிக்குச் சந்தைப் பேட்டை மைதானத்தில், தோழர் ப. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில், தோழர் சிற்றுளி-சுப்பிரமணியம் பேசிய பிறகு பொதுச் செயலாளர் பேசினர்.

பல கழகங்களின் சார்பில் மலர் மாலைகளும், கைத்தறித் துண்டுகளும் அணிவிக்கப்பட்டன.

குருக்கபுரம் விவசாயிகள் சங்கத்தின் சார்பில் 'நம் நாடு' நாளிதழுக்கு ரூ. 1-ம், சேந்தமங்கலம் தி. மு. கழகச் சார்பில் ரூ. 1-ம் கொடுக்கப்பட்டது.

இராசிபுரம் நகர தி. மு. கழகம், மாநில மாநாட்டு நிதிக்காக ரூ. 111-1-1 கொடுத்தது.

காங்கிரசாரின் கைத்தறி நெசவாளர் சங்கம், பொதுச் செயலாளருக்குக் கதர் மாலை அணிவித்தது.

பின்னர் பொதுச்செயலாளர் அவர்கள், தற்கால அரசியல் நிலையும், திராவிட நாட்டுப் பிரிவினையும் குறித்து விளக்கிப் பேசினர்.

பாலக்கோடு

12-9-55 மாலை, பொதுச்செயலாளர் பாலக்கோடு வந்து சேர்ந்தார்.

மாலை 6 மணிக்கு தோழர் பி. எம். குப்புசாமி தலைமையில் கூட்டம் ஆரம்பமாயிற்று.

தி. மு. கழகத்தின் இலட்சியம் குறித்துத் தோழர்கள் ஏ. ஆனைமுத்து, சிற்றுளி-சுப்பிரமணியம், ஜி. பி. சோமசுந்தரம் ஆகியோர் பேசினர்.

பொதுச் செயலாளர் அவர்களுக்கு தர்மபுரி வட்டத்திலுள்ள பல கிளைக் கழகங்கள் சார்பிலும், தனிப்பட்டோர்கள் சார்பிலும், ஏராளமான மலர்மாலைகளும், கைத்தறித் துண்டுகளும் அணிவிக்கப்பட்டது.

பாலக்கோடு, பெத்தம்பட்டி தி. மு. கழகங்களின் சார்பாக மாநில மாநாட்டு நிதிக்கு ரூ. 50 அளிக்கப்பட்டது.

தி. மு. கழகத்தின் வளர்ச்சி, கொள்கை, திராவிடத்தின் வளம், திராவிடம் பிரிவதால் ஏற்படும் நன்மைகள், சமுதாய முற்போக்கு இலட்சியங்கள் ஆகியவை பற்றி பொதுச் செயலாளர் விளக்கவுரை ஆற்றினர்.

அரூர்

ஊராண்மைக் கழக வரவேற்பு

13-9-55 மாலை 5 மணிக்கு, ஊராண்மைக் கழகச் சார்பில், பொதுச்செயலாளர் அவர்களுக்கு வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டது.

கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த நகராண்மைக் கழக உறுப்பினர் தோழர் ஏ. முனுசாமி அவர்களால் வரவேற்பிதழ் வாசிக்கப்பட்டது.

வரவேற்பு உபசாரத்திற்குத் தக்கமுறையில் நன்றி கூறினர்.

பின்னர், மேள வாத்தியங்களோடும், இலட்சிய ஒலி முழக்கங்களுடனும் பொதுச்செயலாளர் அவர்கள் ரேடியோ மைதானத்திற்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

பொதுக்கூட்டம்

தோழர் எச். ஜி. சென்ருயன் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் ப. இராமலிங்கம், பி. எம் குப்புசாமி, ப. கண்ணன், ஏ. ஆனைமுத்து, சிற்றுளி-சுப்பிரமணியம் ஆகியோர் தி. மு. கழகத்தின் கொள்கைகள் குறித்து சொற்பொழிவாற்றினர்.

மாநில மாநாட்டு நிதி

மாவட்டச் செயலாளர் தோழர் ஜி பி. சோமசுந்தரம், மாநில மாநாட்டின் நிதிக்காகச் சேலம் மாவட்டக் கழகச் சார்பில், ரூ. 1,000 (இராசிபுரம், பாலக்கோடு ஆகியஇடங்களில் கொடுக்கப்பட்டதும் சேர்த்து, பொதுச் செயலாளரிடம் அளித்தார்.

பொதுச் செயலாளர் அவர்கட்கு அரூர் நகர தி. மு. கழகம், வாச்சாப்பேட்டை தி. மு. கழகம் ஆகியவை சார்பில், தோழர்கள் எச். சி. சென்னையா, எச். வி. சஞ்சீவன் ஆகியோர்களால் வரவேற்பு மடல்கள் வாசித்தளிக்கப்பட்டன.

மற்றும் பல கிளைக் கழகங்களாலும், கழக அனுதாபிகளாலும் மலர் மாலைகளும், கைத்தறி நூல் மாலை—துணி மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில் தமக்களிக்கப்பட்ட வரவேற்புகளுக்கு நன்றி கூறினர். மாநில மாநாட்டிற்கு நிதியளித்த கழகத் தோழர்களையும், வசூலித்த மாவட்டக் கழக நிர்வாகிகளையும் பெரிதும் பாராட்டினர்.

பின்னர், நம் மக்கள் நிலையும்—நாட்டின் வளமும், நம்மைச் சுரண்டி வாழும் வடவரின் ஆட்சியினுல் நாசமடையும் பிற்போக்கு பற்றியும் மிக விளக்கமாக சொற்பொழிவாற்றினர்.

கழகத் தோழர்களும், நகர முக்கியஸ்தர்களும் ஆன சுமார் நூறு பேர்கள் கலந்துகொண்ட இரவு விருந்து ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பொதுச் செயலாளரும், பிற மாவட்டக் கழக நிர்வாகிகளும் அவ்விருந்தில் கலந்துகொண்டனர். பிறகு பொதுச் செயலாளர் சேலம் வழியாகச் சென்னை திரும்பினர். (ந-கி.)

19 மாதத்தில் 19,000 இந்தியர்கள்

இலங்கையிலிருந்து திரும்பினர்!

கொழும்பு, செப். 15—

1954 ஜனவரியிலிருந்து, 1955 ஆகஸ்ட் 31-ந் தேதி வரை 19,000-க்கு மேற்பட்ட இந்தியர்கள் இலங்கையிலிருந்து இந்தியாவுக்குச் சென்றுவிட்டதாக இந்திய ஹை-கமிஷனர் காரியாலயத்தில் தகவல் கிடைத்திருக்கிறது. இவர்களில் 6,356 பேர் இலங்கை சர்க்காரின் 'வெளியேற்ற உத்திரவு' பெற்றதும் சென்றதாகவும், 12,815 பேர் தாமாகவே சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சென்ற ஆண்டில், இலங்கையின் 'வெளியேற்ற உத்திரவு' பெற்று 2,499 இந்தியரும், தாமாகவே 4,235 பேரும் வெளியேறினர்.

1948-ம் ஆண்டிலிருந்து இது வரை 1,55,000 பேருக்கு 'பாஸ்போர்ட்டு'கள் வழங்கப்பட்டுள்ளன; அவர்களில் சுமார் 75,000 பேர் இந்தியாவிலேயே தங்கிவிட்டனர்

தற்பொழுது இலங்கை முழுவதிலும் 80,000 இந்தியக் குடி மக்களே உள்ளனர்.

இலங்கை சென்றுள்ள இந்தியர்கள் வேறு; இலங்கையிலேயே பிறந்து வளர்ந்த இந்தியர்கள் வேறு.

இலங்கையிலேயே பிறந்து வளர்ந்த இந்தியர்கள் 8 இலட்சத்திற்கு மேல் இலங்கையிலேயே உள்ளனர்; குடியுரிமை கொடுக்காமல் இவர்களில் பெரும்பாலோரை இந்தியாவுக்குத் துரத்திவிடுவதற்கு இலங்கை சூழ்ச்சிகள் செய்வது அறிந்த ஒன்றுகும்; இவர்களின் அரசியல் அந்தஸ்து இனிமேல்தான் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

பொன்மலைப்பட்டியில்

பொதுச் செயலாளருக்கு வரவேற்பு

10-9-55 காலை 6 மணிக்கு, பொன்மலைப்பட்டி புகைவண்டி நிலயத்திற்கு பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், திருச்சி மாவட்டச் செயலாளர் அன்பில்-தர்மலிங்கம் அவர்களும் வந்திறங்கியதும், ஆயிரக்கணக்கான இரயில்வே தொழிலாளர்களும், கழகத் தோழர்களும் வாழ்த்தொலி எழுப்பி மலர்மாலையிட்டு வரவேற்றனர்; பின் கழகக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட காரில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

பிற்பகல் பொன்மலை — மேலக்கற்கண்டார் கோட்டை தி மு கழகத்தில் தேநீர் விருந்து நடைபெற்றது.

கிளைக் கழக 2-வது ஆண்டுவிழா

மாலை $6\frac{1}{2}$ மணிக்கு பொன்மலைப்பட்டி தி. மு. கழகக் காரியாலயத்திற்கு முன் அமைந்துள்ள பந்தலில் தோழர் அன்பில்-தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் நாட்டுப் பிரிவினையைப் பற்றியும், இந்நுழைவைப் பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

பொன்மலைப்பட்டி, பொன்மலை-மேலக்கற்கண்டார்கோட்டை, செந்தண்ணீர்புரம் கிளைக் கழகங்கள், இரயில்வே தொழிலாளர்கள் ஆகியோர்கள் சார்பில் பொதுச் செயலாளருக்குக்கைத்தறி ஆடைகளும், வாழ்த்து மடல்களும் அளிக்கப்பட்டன.

அன்று இரவு 10-30 மணிக்கு, பொன்மலை இந்தியர் படிப்பக மன்றத்தில் 'இதயக் குரல்' நாடகம் நடைபெற்றது.

செய்திச் சுருள்

பம்பாய்—தாராவியில் பாரதி விழா

பம்பாய் தென்னிந்திய ஆதிதிராவிட மகாஜன சங்கச் சார்பில், 11-9-55 மாலை, தாராவி கணேசர் ஆலய மண்டபத்தில் திரு. கு. ப. வேல் தலைமையில் விழா நடைபெற்றது. திரு. எஸ். நடராசன் பாரதியாரின் படத்தைத் திறந்து வைத்தார். பின்னர், தோழர்கள் எம். எஸ். இராமச்சந்திரன், மு. ரா. ஆறுமுகம், சா. சுந்தரம் ஆகியோர் 'பாரதியார் கண்ட சமதர்ம மாதிரி சமுதாயம்' பற்றி சொற்பொழிவாற்றினர்.

பாராட்டுக் கூட்டம்

10-9-55 மாலை 7 மணிக்கு, சூலூர் வள்ளுவர் படிப்பகத்தில், அரிசி, மாவு அரைக்கும் ஆலை சொந்தக்காரர்கள் சார்பில், சூலூர் பழைய மின்சார இலாகா மேற்பார்வையாளர் திரு. வி.எஸ் சர்மா அவர்களுக்கும், புதிய மேற்பார்வையாளர் வி. கே. ஜேக்கப் அவர்களுக்கும், தேநீர் விருந்தும், புகைப்படம் எடுத்தலும் நடத்தப்பட்டது. தோழர் கே. ஆர். பழனியப்பர் தலைமையில், தோழர்கள் செ. க. சின்னுச்சாமி, எஸ். வி. லட்சுமணன், வி. என். அற்புதசாமி ஆகியோர் மேற்படி அதிகாரிகளின் சேவைகளை பாராட்டிப் பேசினர்.

குடியேற்றம் 'மக்கள் மறுமலர்ச்சி மன்றம்'

11-9-55 மாலை 7 மணிக்கு, குடியேற்றம் மக்கள் மறுமலர்ச்சி மன்ற நிர்வாகக் குழு கூட்டம் தோழர் அன்பழகன் இல்லத்தில் நடைபெற்றது. வருகிற 27-ந் தேதி மன்றத் திறப்பு விழாவை நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

முள்ளிப்பட்டு (வ. ஆ. மா.) திருக்குறள் வளர்ச்சிக் கழகம்

29-8-55-ல், மேற்படியூரில், திரு. கோ. இளையபெருமான் அவர்களால் கூட்டப்பட்டு நடைபெற்ற கூட்டமொன்றில் 'திருக்குறள் வளர்ச்சிக் கழகம்' என்ற பெயருடன் ஒரு அமைப்பு நிறுவப்பட்டது. தோழர்கள் அ. மாணிக்கவாசகனுர், அ. இராமலிங்கம், பு. தி கிருட்டிணமூர்த்தி ஆகியோர் முறையே தலைவராகவும், செயலாளராகவும், பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சனிக்கிழமை தோறும் மாலை 6 மணிக்குத் தலைவர் தோழர் அ. மாணிக்கவாசகனுர் அவர்களால் திருக்குறள் வகுப்பு நடத்தப்படுகிறது திருக்குறட்பாக்களை, ஒவ்வொரு வீட்டிலும் தனித்தனியே ஒரு பலகையில் எழுதி வைத்து அதன் மூலம், பரப்புவதற்கான முயற்சி செய்யப்பட்டுவருகிறது.

'சிலம்புச் செல்வி'

ஐதராபாத்—சிமால்பூர் தி. மு. கழகப் பொருளாளர் தோழர் நா. கிருட்டிணன் அவர்களது துணைவியார் தோழியர் சம்பூரணம் அம்மையார் 8-6-55ல், ஒரு பெண் மகவொன்றுக்குத் தாயானர்; 'நம் நாடு' பொறுப்பாளர் தோழர் அ. பொன்னம்பலனுர் அவர்களால் அம்மகவுக்கு 'சிலம்புச் செல்வி' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இதன் நினைவாக 'நம் நாடு' இதழுக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டுள்ளது — பெற்றுக்கொண்டோம் —நன்றி-பொறுப்பாளர்.

செய்த சிபாரிசுகள் 152! சர்க்கார் ஏற்றது 59!

"இரயில்வே இலஞ்ச ஊழல் விசாரணைக் குழுவினர் செய்துள்ள 152 சிபாரிசுகளில் 59 சிபாரிசுகளை இதுவரையில் சர்க்கார் ஏற்றுக்கொண்டுள்ளனர்," என்று கேள்வி நேரத்தின் போது மக்கள் சபையில் உதவி இரயில்வே மந்திரி ஓ வி. அழகேசன் அறிவித்துள்ளார்.

திருமணங்கள்

9-9-55 காலை 9 மணிக்கு செங்கற்பட்டு மாவட்டம் ஆனைபுத்தூரில் திரு. மாணிக்கம் மகன் தோழர் வரதன் (வன்னியர்) —தோழியர் கன்னம்மாள் (முதலியார்) காதல் கலப்புத் திருமணம் தோழர் காஞ்சி-மணிமொழியார் தலைமையில் நடைபெற்றது. தலைவர் அவர்களும், தோழர் கணபதி அவர்களும், 'கலப்பு மணம், சீர்திருத்தத் திருமணம்' பற்றிப் பேசினர். ஏராளமான மலர்மாலைகளும், வாழ்த்திதழ்களும், பரிசுகளும் மணமக்களுக்கு வழங்கப்பட்டன. இத்திருமண நினைவாக 'நம் நாடு' இதழுக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது-வரப்பெற்றோம்-நன்றி-பொறுப்பாளர்.

* * *

12-9-55 காலை 8 மணியளவில், சிதம்பரம் வட்டம் சிவாயம் தி. மு. கழகக் கிளை உறுப்பினர் தோழர் சக்கரவர்த்தி—தோழியர் கோகிலம் திருமணம், தோழர் இரத்தினபாலகுருசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர் பொன். சொக்கலிங்கம் மணமக்களை வாழ்த்தி சொற்பொழிவாற்றினர்.

அன்று காலை $10\frac{1}{2}$ மணியளவில், மேற்படி கிளைக் கழக உறுப்பினர் தோழர் இராமமூர்த்தி—தோழியர் சாவித்திரி திருமணம் தோழர் பொன். சொக்கலிங்கம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சிதம்பரம், பரமசிவம், சிவாயம் இராமலிங்கம், இரத்தின பாலகுருசாமி ஆகியோர் மணமக்களை வாழ்த்திச் சொற்பொழிவாற்றினர்.

மேற்கண்ட இரு திருமணங்களின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்காக ரூ. 1, ரூ. 1-ஆக மொத்தம் ரூ. 2 அனுப்பப்பட்டுள்ளது—வரப்பெற்றோம்— நன்றி—பொறுப்பாளர்.

* * *

4-9-55 காலை நல்லிபாளையம் தோழர் ந. பத்மநாப—தோழியர் பெ. சரோசா திருமணம், தோழர் ஈ. வெ. கி. சம்பத் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஜி. பி. சோமசுந்தரம், காளியப்பன், தங்கவேல், கபார், கருப்பண்ணன், கே. வி. ராமசாமி எம்.எல் ஏ., ந. பெருமாள், சிற்றுளி-சுப்பிரமணியம் ஆகியோர் மணமக்களைப் பாராட்டிச் சொற்பொழிவாற்றினர். இறுதியில் தோழர் ஈ. வெ. கி. சம்பத், 'சீர்திருத்தத் திருமணத்தின் அவசியம்' பற்றிச் சொற்பொழிவாற்றினர். இத்திருமண நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1-ம், மாநில மாநாட்டு நிதிக்காக ரூ. 1-ம் நன்கொடை தரப்பட்டுள்ளது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

12-9-55 காலை 7 மணிக்கு, சென்னை எழும்பூர், சடையப்ப மேஸ்திரி தெரு, எண். 41 இல்லத்தில், தோழர் ஜி. இரங்கநாதன்—தோழியர் கே. இந்திராணி திருமணம் தோழியர் சத்தியவாணிமுத்து தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் வி. முனுசாமி, வி.எஸ். தமிழ்தாசன், சாமி ஆகியோர் மணமக்களைப் பாராட்டிப் பேசினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' இதழுக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது — வரப்பெற்றோம்— நன்றி—பொறுப்பாளர்.

* * *

12-9-55ல், வாணியம்பாடி கோட்டையில், தோழர் ஏ. தெய்வசிகாமணி இல்லத்தில், தோழியர் அபரஞ்சிதம் அம்மையார் தலைமையில் தோழர் எம். ஆர். கிருட்டிணசாமி—தோழியர் ஆர். ருக்குமணி சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. இதன் நினைவாக மணமக்கள் சார்பில் நகர தி. மு. கழகத்திற்கு ரூ. 1 நன்கொடை அளிக்கப்பட்டது.

* * *

12-9-55ல், மணமேடு தோழர் ஆறுமுகம்—தோழியர் பிச்சையம்மாள் திருமணம் நடைபெற்றது. அதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது - வரப்பெற்றோம்-நன்றி - பொறுப்பாளர்

இராணுவம், கடற்படை கலகம்: நெருக்கடி நிலைமை பிரகடனம்

அரசாங்கத்திற்கு எதிராக 'புரட்சி'!

பியூனஸ் அயர்ஸ், செப். 15—அர்ஜெண்டைனு மாவட்டப் பகுதிகளில், சில இராணுவப்படைகளும், கடற்படையின் ஒரு பகுதியும், பெரான் சர்க்காருக்கு எதிராகப் 'புரட்சி'யில் ஈடுபட்டதாகச் செய்திகள் அறிவிக்கின்றன.

நாடு பூராவும் 'நெருக்கடி நிலைமை' பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

மூன்று மாதங்களுக்கு முன், அர்ஜெண்டைனுவின் தலைநகரமான பியூனஸ்அயர்சில் இராணுவப் படையினர் கலகம் செய்ததால் 100 பேர் கொல்லப்பட்டது நினைவிலிருக்கலாம்.

பியூனஸ் அயர்சில், இப்பொழுது எல்லா பாதுகாப்புப் படைகளும் ஒன்று திரட்டப்பட்டுள்ளனராம்.

சர்க்காரை எதிர்த்துக் கலகம் செய்பவர்கள் ஒரு போலீஸ்காரரைச் சுட்டுள்ளனர்; அவர்களில் 100 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கலகப் படையினருக்கும்—அரசாங்கச் சார்பு இராணுவப் படையினருக்கும் இடையில் 5 மணி நேரம் கடுமையான போர் மூண்டதாம்.

ஒரு மாகாணப் பகுதியில் கலகம் அடக்கப்பட்டு, 300 பேர் சரணுகதி அடைந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

'ஜனாதிபதி பெரான் இராஜிநாமா செய்யவேண்டும்,' என்று கலகத்தில் ஈடுபட்ட இராணுவத்தினர் கோருகின்றனராம்.

அர்ஜெண்டைனுவின் முன்னாள் மன்னர்களின் ஆதரவாளர்களும், செல்வம் படைத்தவர்களுமே கலகத்திற்குக் காரணமென்றும், அவர்களே தனக்கு விரோதிகள் என்றும் ஜனாதிபதி பெரான் கூறியுள்ளார்.

அர்ஜெண்டைனுவில் மூன்றுவது பெரிய நகரமான கார்டோபா, கலகக்காரரிடம் சிக்கிவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கலகப் படையினரைத் தாக்குவதற்கு ரியோ சாண்டியாகோ கடற்படைத்தளத்திற்கு வெடிகுண்டு விமானங்களை ஜனாதிபதி பெரான் அனுப்பியுள்ளாராம்.

ஆரம்பத்தில், கார்டோபா கடற்படையினருக்கும்—அரசாங்க விசுவாசமுள்ள இராணுவத்திற்குமிடையே போர் நடந்ததாம்; இப்பகுதி மக்கள் தொகை மட்டும் 3,65,000 ஆகும்.

மாநில புனரமைப்புக் குழு சிபாரிசுகள்

தனக்கு எதும் தெரியாதென காமராசர் அறிவிப்பு

சென்னை, செப். 16—'மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகள்,' என்று முன்கூட்டியே திரு-கொச்சி, ஆந்திர முதன் மந்திரிகள் கூறியதைப் போல, தன்னிடம் சொல்லுவதற்கு எதும் இல்லை என்றும், தனக்கு எதுவும் தெரியாது என்றும் சென்னை முதன் மந்திரி காமராசர் தெரிவித்திருக்கிறார்.

திரு-கொச்சி, ஆந்திர முதன் மந்திரிகள் அதுபற்றித் தந்த அறிவிப்புகளைச் சுட்டிக்காட்டிய போது, காமராசர் சிரித்துக்கொண்டே, "மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகள் பற்றி எனக்கு அதிகாரபூர்வமாக எதும் தெரியாதபோது, நான் எப்படி அதுபற்றிக் கருத்தறிவிக்க முடியும்? நாங்கள் டில்லியிலிருந்த போது, 'மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகள் குறித்து நாங்கள் எதும் கலவரமடையத் தேவை இல்லை,' என்று மட்டுமே கூறப்பட்டது," என்றும், காமராசர் குறிப்பிட்டிருக்கிறார்.

புதிய நியாய வாரச் சட்டம்

சென்னை சர்க்கார் தயாரிக்கிறது

சென்னை, செப். 16—சாகுபடிச் செலவு, நிலவரி ஆகியவற்றை மொத்த விளைச்சலின் மதிப்பிலிருந்து கழித்து மீதமுள்ளதை நிலக்காரரும்—சாகுபடியாளரும் சமமாகப் பங்கிட்டுக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில், நியாய—வாரச் சட்டத்தை இயற்றுவதென மாநில சர்க்கார் முடிவு செய்து அந்த அடிப்படையில் மசோதா தயாராகிறது.

மலபார் நீங்கலாக, இப்பொழுது தஞ்சை பண்ணையாள்—சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டம் அமுலில் உள்ள பகுதிகளையும் சேர்த்தே எல்லா மாவட்டங்களுக்கும் புதிய சட்டம் அமுலாகும். (இப்பொழுது தஞ்சையில், 60:40 சதவிகிதத்தில், விளைச்சல் பகிர்ந்து கொள்ளப்படுகிறது)

ரஷ்யாவிலும் — சிறைவிலுமிருக்கும் ஜப்பானியர்கள், விடுதலை பெற்றுத் தாயகம் திரும்புவதற்குத் தன்னாலியன்ற உதவிகளைச் செய்வதாக பிரதமர் நேரு உறுதிமொழி தந்துள்ளாராம்.

மொராக்கோவுக்கு சுய ஆட்சி

24 மணி நேரத்தில் அமுலாகும்?

பாரிஸ், செப் 16—அடுத்த 24 மணி நேரத்திற்குள், புதிய சுய ஆட்சித் திட்டக் கொள்கையை மொராக்கோவில் அமுல் நடத்தலாம் என்று பிரெஞ்சு சர்க்கார் நம்பிக்கை தெரிவித்துள்ளதாம்.

சைக்கிள் சவாரியில் 'உலக ரிக்கார்டு'

ஐதராபாத், செப். 16—26 வயதுடைய ஜோசப் பிதோலாத் என்ற மலேயாள இளைஞர், 132-மணி நேரம் இடைவிடாது சைக்கிள் சவாரி செய்து, 'உலக ரிக்கார்டு' ஒன்றை ஏற்படுத்தியுள்ளார். இவ்வாற்றலை அவர் செய்து முடிக்கையில் 50,000 பேர் அங்கு குழுமியிருந்தனராம். வெற்றி கண்ட அவரை, ஐதராபாத் மேயர், மார்புறத் தழுவியுள்ளார்.

பர்மாவில் ஒரு...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

எதிர்பாராத விதமாக அந்தப் புரட்சிக்காரர்கள் சிறையைச் சுற்றி வளைத்துக் கொண்டு, சிறையைக் காவல் புரிந்தவர்களை 'வென்று', சிறைக்குள் நுழைந்து தங்கள் தலைவர்களையும், இதரர்களையும் விடுதலை செய்திருக்கின்றனர்.

சிறையில் உள்ள பொருள் கிடங்கு தாக்கப்பட்டு, அங்கு வைக்கப்பட்டிருந்த பொருள்களை எல்லாம் தங்கள் விருப்பம்போல புரட்சிக்காரர்கள் எடுத்துக்கொண்டனர் என்றும், அங்கிருந்த ஒரு பட்டக் குதிரையைக்கூட அவர்கள் கூட்டிச் சென்றுவிட்டனர் என்றும் கூறப்படுகிறது.

இந்தத் தாக்குதலின்போது ஒரு புரட்சிக்காரர் கொல்லப்பட்டார் என்றும் தெரியவருகிறது.

சிறைக் காவலாளிகள் எல்லாம் 'கைது' செய்யப்பட்டு, ஊருக்கு வெளியில் கொண்டுபோய் விடுவிக்கப்பட்டனர் என்றும் தெரிகிறது.

நாடெங்கும் பிரிவினை முழக்கம்

★

சென்னை

★

11-வது வட்டம்

18—9—55 காலை 10 மணிக்கு, கழகப் பணிமனையில் (4/88, பிராட்வே ரோடு), தோழர் கா. மு சீனிவாசன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

37-வது வட்டம்

19—9—55 காலை 8 மணிக்கு, சென்னை இராயப்பேட்டை (37-வது வட்டம்) தி. மு. கழகப் பணி மனையில், தோழர் ம. நம்பி தலைமையில் நடைபெறும். தோழர்கள் பலர் பேசுவர்.

★

சூளை கிளை

19—9—55 மாலை 6 மணிக்கு, கழகப் பணிமனையில் (மாணிக்கச் செட்டித் தெரு, சூளை), தோழியர் சத்தியவாணிமுத்து தலைமையில், தோழர்கள் இரா. சண்முகம், ஏ. டி. இராசன் குழுவினரின் இன்னிசை நடைபெறும்.

* * *

தி. இ. மு. கழகம்

18—9—55 காலை 7 மணிக்கு, எண் 33, படவேட்டம்மன் கோயில் தெரு, கழகப் பணிமனையில் (24-வது வட்டம், குயப்பேட்டை) தோழர் ஆர் டி. அரசு தலைமையில் நடைபெறும் தோழர்கள் பலர் பேசுவர்.

★

மதுரை

ஜின்னு திடலில்

18—9—55 மாலை 6 மணிக்கு

பேசுவோர்:
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
எம். எஸ். இராமசாமி
எஸ். முத்து

மாலை 5 மணிக்கு, பெரியவிளக்குத்தூணிலிருந்து ஓர் ஊர்வலம் புறப்பட்டு, ஜின்னு திடலை அடையும் அன்று இரவு 10½ மணிக்கு, மதுரை நகர் ஓட்டல் தொழிலாளர்கள் சார்பாக, நகர் கழகத்தின் முன்பாக, பி. எஸ். செல்வா, சி ஆர் சௌந்தரராசன் குழுவினரின் இன்னிசை நடைபெறும்.

★

பூவிருந்தவல்லி

சன்னதித் தெருவில்

20—9—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: வா.வே.இராமச்சந்திரன்

பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
முகவை ஆர்.எஸ்.பாண்டியன்

தி. மு. கழக 7-ம் ஆண்டு விழாவும் திராவிட நாட்டுப் பிரிவினை வாரமும்

★

இடம்: சென்னை - பெரம்பூர் ஏரி மைதானம்

காலம்: 18—9—1955 மாலை 6 மணி

தலைவர்: டி. சண்முகம் எம். எல். ஏ.,

பேசுபவர்: **அண்ணாதுரை**

★

கூட்டத்தில், பெரம்பூர் லோகோ தொழிலாளர்கள் சார்பில் மாநில மாநாட்டிற்கு நிதி வழங்கப்படும்

சென்னை-பெரம்பூர் 6-வது வட்ட தி மு கழகம்

ஊர்வலம்:

18-9-55 ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு, சென்னை நேப்பியர் பார்க்கிலிருந்து, மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு, முக்கிய தெருக்கள் வழியாகச் சென்று, அன்று மாலை பெரம்பூரில் நடைபெறும் பொதுக்கூட்டத்தை அடையும். எல்லாக் கிளைக் கழகங்களும் கழகக் கொடிகளேந்தி ஊர்வலத்தில் கலந்துகொள்ள வேண்டப்படுகின்றனர்

தி. மு. க. பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன் மணமேடு வருகை

★

20—9—55 மாலை 5 மணிக்கு, மணமேடு, பாவோடி மைதானத்தில், தோழர் எஸ். ஆர். நடராசன் தலைமையில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் சொற்பொழிவாற்றுவார்.

ஃ ஃ ஃ

மாயூரம் வருகை

21—9—55 மாலை 6 மணிக்கு, மாயூரம் நகரப் பூங்காவில், பொதுச்செயலாளர் வரவேற்பும், திராவிட நாடு பிரிவினை நாள் விழாவும் தோழர் இரே. ஜோசப் தலைமையில் நடைபெறும். தோழர்கள் நாதன், என். கிட்டப்பா ஆகியோர் வரவேற்புரையாற்றுவர். பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் சொற்பொழிவாற்றுவார்.

மாலை 3½ மணிக்கு, மாயூரம் முசாபரி பங்களாவிலிருந்து பொதுச்செயலாளர் அவர்கள் தோழர் து காசிநாதன் தலைமையில் நகரப் பூங்காவிற்கு ஊர்வலமாக அழைத்துச்செல்லப்படுவார்.

மாலை 5 மணிக்கு, தோழர் பி. டி. ராசன் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெறும்.

அறிவிப்பு

நான் காஞ்சீபுரம் நகரசபைத் தேர்தலில் கலந்துகொள்வதால் 16—9—55 முதல் 15—10—55 வரை காஞ்சியிலேயே தங்கியிருக்க வேண்டியிருக்கிறது. தொடர்புகொள்ள விழையும் நண்பர்கள், கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதக் கோருகிறேன்.

அன்பன்
காஞ்சி-கல்யாணசுந்தரம்,
26, சப்பாணிப் பிள்ளையார் கோயில் தெரு,
காஞ்சீபுரம்

தி. மு. க. பொதுச்செயலாளர்

நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

17—9—55 காட்பாடி
மாலை 5 மணி: ஊராண்மைக் கழக வரவேற்பு
மாலை 6 மணி: தி. மு. கழகப் பொதுக்கூட்டம்
18—9—55 திருப்பூர்
காலை: சிறப்புச் சொற்பொழிவு
மாலை: தி. மு. கழகப் பொதுக் கூட்டம்
19—9—55 காங்கேயம்—மாலை பொதுக்கூட்டம்
20—9—55 மணமேடு ,,
21—9—55 மாயூரம் ,,

திரு. வி. க. நினைவு நாள்

20—9—55 மாலை 6 மணிக்கு, சென்னை—ஆயிரம் விளக்கு, அஜீஸ்முல்க் 5-வது தெருவில், தோழர் எஸ். எஸ். தென்னரசு தலைமையில் நடைபெறும். திரு. வி. க. படத்தை தோழர் கண்ணதாசன் திறந்துவைப்பார். தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், கே. ஆர். ராமசாமி, ஜி. முத்துகிருஷ்ணன், கா. அ. இந்திரவேலு, கே. மறைமலை ஆகியோர் பேசுவர்.

பொதுக்கூட்டம்

19—9—55 மாலை 6 மணிக்கு, சென்னை-சேப்பாக்கம், பெரிய தெருவில், டாக்டர் சி. நடேசன் மன்றச் சார்பில், தோழர் தி. துரைக்கண்ணு தலைமையில் நடைபெறும். தோழர்கள் கா. அப்பாதுரை, கண்ணதாசன், என் எஸ். கிருஷ்ணன், எஸ் எஸ். இராசேந்திரன் ஆகியோர் பேசுவர்.

தலைமைக் கழகம்: அறிக்கை—28/55

பிரிவினை வாரத்தில் நிறைவேற்ற வேண்டிய தீர்மானம்

"பிரிந்துபோகும் தனி உரிமையோடு கூடிய தமிழகம்—ஆந்திரம்—கர்நாடகம் (துளுவம் உள்பட)—கேரளம் ஆகிய பகுதிகள் மொழிவழியும், தேவையான மாநில உரிமைகள் வழியும் தனித்தனிப் பிரிந்து, வெளிநாட்டு—வட நாட்டுச் சுரண்டல் தடுப்பு, வடநாட்டு அரசியல் ஆதிக்கத் தடுப்பு, வட நாட்டு இந்தி ஏகாதிபத்தியத் தடுப்பு, வாணிபம், போக்குவரத்துப் பற்றுக் கோடுகள், தபால்-தந்தி, உள்நாட்டுப் பாதுகாப்பு, வெளிநாட்டுக் கொள்கை, நாணயச் செலாவணி, இன்னபிற வழிகளில் குறைந்த அளவுத் திட்டத்தில், ஒன்றுபட்ட சுதந்திரச் சமதர்மத் திராவிடக் குடியரசுக் கூட்டாட்சியை அடைய நாம் அனைவரும் பாடுபடுவோமாக."

மேற்கண்ட தீர்மானத்தைப் பிரிவினை வாரக் கொண்டாட்டக் கூட்டங்களில் கழகத் தோழர்கள் நிறைவேற்றுவார்களாக!

அறிவகம்', சென்னை-13
16—9—55

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர். இரா. நெடுஞ்செழியன், எம் ஏ.